www.tamilarangam.net

## சிறிலங்காவின் கொடும் சிறைகளில் வாடும் தமிழ் அரசியற் கைதிகளின் மனித உரிமைகளுக்காக

# மாபெரும் கவன ஈர்ப்புப் போராட்டம்

**காலம்:- 19-12-97 வெள்ளிக்கிழமை**
**மாலை 4 மணி தொடக்கம் 7 மணிவரை**

**இடம் :- 10 DOWNING STREET முன்பாக**

(**அருகாமையிலுள்ள** Underground station : Westminster)

சிறிலங்காவின் களுத்துறை கொடூரச் சிறையில் அரசின் சதிச் செயலால் நிகழ்த்தப்பட்ட படுகொலைகளைக் கண்டிக்குமாறும் உண்ணாவிரதப் போராட்டம் இருந்து வரும் தமிழ்க் கைதிகளுக்கு மனிதாபிமான ஆதரவு வழங்குமாறும் பிரித்தானியப் பிரதமரினைக் கோரி பிரித்தானியப் பிரதமரின் வாசல்தலத்தின் முன் மாபெரும் கவன ஈர்ப்புப் போராட்டமொன்றை நடத்த தமிழர் மனித உரிமைகள் மையம் தீர்மானித்துள்ளது.

சிறிலங்கா அரசும் அதன் ஆதரவுசக்திகளும் தமிழ் அரசியற் கைதிகளை குற்றவாளிகள் என்றும் களுத்துறைச் சிறையில் தமிழ் – சிங்களக் கைதிகளுக்கிடையில் மோதல்தான் ஏற்பட்டதென்றும் இம் மோதலிலேயே தமிழ்க் கைதிகள் கொல்லப்பட்டனர் என்றும் திட்டமிட்ட பொய்ப் பிரச்சாரத்தைப் பரப்பி வருகின்றன. கொழும்பு வெலிக்கடைச் சிறையிலிருந்து சிறிலங்கா பொலிசினால் வன்முறைத் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு பலவந்தமாக களுத்துறை சிறைக்கு மாற்றப்பட்ட தமிழ் அரசியற் கைதிகள் அங்கு திட்டமிட்ட படுகொலைக்கு உள்ளாகினர் என்பதே உண்மை நிலையாகும்.

இதை மூடி மறைத்து சர்வதேச சமூகத்தின் கண்களை மூட சிறிலங்கா அரசு கங்கணம் கட்டி நிற்கையில் துயருறும் எமது சகோதரர்களுக்காக உலகளாவிய ரீதியில் குரல் எழுப்ப வேண்டியது உலகெங்கும் வாழும் தமிழ் மக்களின் கடமையாகும்.

இந்தவகையில் மேற்படி கவன ஈர்ப்புப் போராட்டத்திற்கு அணிதிரண்டு வருமாறு அனைவரையும் அழைக்கின்றோம். அத்துடன் தமிழ் அரசியற் கைதிகளின் நிலையினைத் தொடர்ந்தும் சர்வதேச சமூகத்தின் கவனத்திற்குக் கொண்டு வர எடுக்கப்படும் எமது நடவடிக்கைகளுக்கு பாரியளவில் ஒத்துழைப்பு வழங்குமாறும் அனைவரையும் வேண்டுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு :- 0171 403 4554**